K. R. KUGAANESWARAAN
(Member of Parliament)
E.P.R.L.F.

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O (QD / 79 / News / 94)



# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

வெளியீடு: 7 | 01 சித்திரை 1994 | விலை: ரூபா ஐந்து

## வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும்

# சதி அரங்கேறும் நேரம்!

✡ சகல சிறுபான்மை இனங்களையும், அடிமைகளாகக் கருதி செயற்பட்டு வரும் அரசின் வஞ்சகத் தனங்கள் அம்பலமாக்க ✡

✡ பெரும்பான்மை இனத்திற்கு உள்ள அதேயளவு அதிகாரங்கள் சிறுபான்மை இனங்களுக்கும் உண்டென்பதை இடித்துரைக்க ✡

✡ சிறுபான்மை இனங்களைப் புறக்கணித்து இந்த நாட்டையே ஆள முடியாதென்பதை இவர்கள் மண்டையில் உறைக்கச் செய்ய ✡

## தமிழ் முஸ்லீம் மலையக மக்களே ஐக்கியப்படுவீர்!

உள்ளூராட்சித் தேர்தல்களும் நடாத்தி முடிக்கப்பட்டு விட்டன. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் பிரேதசங்களில் பல இடங்களில் தோல்வி கண்டாலும், தேர்தலை நடாத்தி முடித்ததன் மூலம் தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு ஓர் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொள்வதிலும், கிழக்கில் ஜனநாயகம் திரும்பி விட்டது என்ற மாயையை ஏற்படுத்துவதிலும் அரசாங்கம் வெற்றிகண்டுள்ளது என்றே கூற வேண்டும். இதற்கு சில தமிழ்க் குழுக்களும் தெரிந்தோ தெரியாமலோ துணைபோயுள்ளது என்பதும் கசப்பான உண்மையாகும். மக்கள் வாக்குச்சாவடிகளுக்குச் செல்ல வேண்டுமென கடந்த 6 மாதகாலமாகவே இராணுவத்தால் மிரட்டப்பட்டு வந்தார்கள். அப்படி அவர்கள் போகாத இடங்களில் பொலீசாரே வாக்குகளைப் போட்டுள்ளனர். சில இடங்களில் மக்கள் போகுமுன்பே காலை 10 மணிக்கே பொலீசார் வாக்குகளைப் போட்டு வாக்களிப்பை முடித்திருந்தனர். இது தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இன்னும் பல கட்சிகளும் தேர்தல் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தி இருந்தன.

தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததை எல்லோருமே ஏற்றுக் கொள்கின்றனர். நடந்து முடிந்த தேர்தலைப் பற்றிய எமது கண்ணோட்டத்தை நாம் இப்பத்திரிகையின் இன்னொரு பகுதியில் கூறியுள்ளோம். எனவே இது தொடர்பாக நாம் பரிசீலனை செய்வதை விடுத்து, அரசாங்கத்தின் தமிழர் விரோதப் போக்குகளையும், வட-கிழக்கை பிரிப்பதையும் எதிர்த்து சிறுபான்மை இனங்கள் யாவும் ஐக்கியப் படுவதைப் பற்றி ஆராய வேண்டும்.

தமிழர், முஸ்லீம் என்ற வேறுபாடின்றி சகல சிறுபான்மை இனங்களையும், அடிமைகளாகக் கருதி செயற்பட்டு வரும் அரசின் வஞ்சகத் தனங்கள் அம்பலமாக்கப்பட வேண்டும். பெரும்பான்மை இனத்திற்கு உள்ள அதே அளவு அதிகாரங்கள் ஏனைய சிறுபான்மை இனத்துக்கும் உண்டென்று ☛




உள்ளூராட்சித் தேர்தலின் பின்...

1994

இருண்ட எம் மக்களின்
"வாழ்வு ஒளிர"
"சுபீட்சம் மலர"
எம் புத்தாண்டு
**வாழ்த்துக்கள்**




கொழும்பு —
**சமாதானத் தூதுகள்**
— யாழ்ப்பாணம்





சுவிஸ் 'தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவரா ???



ஒலிவரின் கதையளப்பு

# கண்ணோட்டம்

ஸ்ரீலங்கா அரசாங்கம், தனது இராணுவத்தினருடன், செயற்படும் தமிழ் குழுக்களையும் இணைத்து வவுனியா-கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடாத்தி முடித்துள்ளது.

கிழக்கு மாகாணத் தேர்தலில் பல மோசடிகள் நடைபெற்றதாக, தேர்தல் ஆணையாளர் உட்பட சகல கட்சிகளும் குற்றம் சாட்டியுள்ளன. மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் பொலீசார் மிகவும் வெளிப்படையாக யூ.என்.பிக்கு பிரச்சாரம் செய்து, துண்டுப்பிரசுரம் கொடுத்து, இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்துள்ளனர். ஆனால் எந்தவிதக் குழப்பமும் இல்லாமல், அரசாங்கம் தேர்தலை நடாத்தி முடித்துள்ளதானது அரசுக்கு ஆறுதலைக் கொடுத்துள்ளதுடன், கிழக்கு மாகாணம் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்ற பிரச்சாரத்தை வெளிநாடுகளில் செய்யவும் உதவியாய் இருக்கின்றது. பங்கு கொண்ட அரசு சார்பு தமிழ்க் குழுக்கள் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசுக்கு எதிரான பிரச்சாரத்தையே முன்னிலைப்படுத்தின. ஜனாதிபதியின் சிங்கள இனவெறிப் பேச்சும், யூ.என்.பியின் மேல் தமிழ் மக்களுக்கு உள்ள வெறுப்பும், வேறு தமிழ் கட்சிகள் தேர்தலில் பங்குபற்றாமையும், அரசு ஆதரவு தமிழ் குழுக்கள் வெற்றி பெற உதவியாக இருந்துள்ளன.

ஆனாலும் அரசு ஆதரவு தமிழ் குழுக்களின் பலவீனம், இவர்கள் குறைந்தபட்சம், கிழக்கு மாகாணத்தின் சகல தமிழ் பிரதேச சபைகளிலும் கூடப் போட்டியிட முடியவில்லை. இதனால் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பிரதேச சபைகளும் யூ.என்.பிக்கு போகும் நிலை ஏற்பட்டது. அதேபோல் அம்பாறை மாவட்டத்திலும் அதிரடிப்படையினரால் உருவாக்கப்பட்ட குழுக்களே வெற்றியடைந்தன. இவையாவும் யூ.என்.பிக்கு அனாவசியமாக வாக்குகளை அதிகரிக்க உதவியது. அரசு சார் தமிழ் குழுக்களுக்கு விழுந்த வாக்குகள் அரசாங்கத்துக்கு எதிராகவும், அதன் மீதுள்ள வெறுப்பைக் காட்டுவதற்கும் விழுந்த வாக்குகள் என்பதில் சந்தேகமில்லை. அதேபோல் கணிசமான மக்கள் தமது வாக்குகளை வலிதற்றதாக்கியும், தேர்தலில் கலந்து கொள்ளாமலும், தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரண்டறக் கலந்துவிட்ட ஈ.பி.டி.பி மீது மக்கள் தமது மோசமான வெறுப்பைக் காட்டியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மக்கள் முன் வாக்கு வேட்டைக்காக அரச எதிர்ப்புக் கோஷத்தை முன்வைத்தவர்கள் எதிர்காலத்தில் எப்படி இயங்கப் போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் அரசையோ, இராணுவத்தையோ இவர்கள் விட்டு விலகினால் இவர்களது இருப்பே கேள்விக் குரியதாகிவிடும். இவர்களது உறுப்பினர்கள் இராணுவத்தில் இருந்து பெற்றுக் கொள்ளும் மாதாந்த ஊதியம் இராணுவம் வழங்கும் மாதாந்தப் படிகள் (ரேசன் ) போன்றவையும் நிற்பாட்டப்படும். அது மாத்திரமல்லாமல், இவர்களது மாதாந்த கலெக்சன் கூட அடிபட்டுப் போய்விடும். இந்நிலையில் இவர்கள் அரசாங்கத்தை தொடர்ந்து ஆதரிப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டிய அரசு சார்பான தமிழ் குழுக்களிடமிருந்து மக்கள் ஒரே ஒரு உதவியை எதிர்பார்க்கின்றார்கள். இதுவரையும், ஆயுத முனையில் மிரட்டியும் உருட்டியும், மக்களிடமிருந்து பெற்றுவந்த வரிகளையும் கொள்ளைகளையும் இனியாவது இவர்கள் நிறுத்த வேண்டும். விரும்பியோ, விரும்பாமலோ, வேறு வழியின்றியோ மக்கள் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளார்கள். எனவே கிடைத்த சொற்ப அதிகாரங்களை வைத்துக் கொண்டு ஏற்கனவே நடாத்திய வரி அறவிடுதல், கொள்ளை போன்றவற்றை சட்டபூர்வமாக்காமல், மக்களை குறைந்தபட்சம் நிம்மதியாக வாழவாவது வழிவிடுவார்களா? உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவம் கொடுக்காமல் இருந்தால் அதுவே போதுமானது.

# தென்னைமரத்தில் புல்லுப்பிடுங்கிய கதை

பாலபோதினியில் தென்னைமரத்தில் புல்லுபிடுங்க ஏறியவனைப்பற்றி ஒரு கதைவரும்.தென்னைமரத்தில் களவாய் தேங்காய் பிடுங்க ஏறிய சிறுவன் மரத்தில் இருக்கும்போதே தோட்டக் காரக் கிழவனிடம் வகையாக மாட்டிக்கொண்டான். ஏனடா தென்னை மரத்தில் ஏறினாய் எனக்கிழவன் அதட்டியபோது, திருட்டுமுழி முழித்து புல்லுபிடுங்க ஏறினேன் என்றானாம் அந்த மடச்சிறுவன். ஆனால் அவன் நன்மை தீமைகளை பகுத்தறியமுடியாத வயதினன். வஞ்சகம் சூதற்றவன். ஆனால் வஞ்சகர்கள் இங்கு மிகக் கொடிய செயலைச் செய்துவிட்டு அந்தச் சிறுவனைப்போல் நடந்துகொள்ள முனைகிறார்கள்.

புதிய விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தேவாலயம் மீது ஏன் விமானப்படை குண்டு வீசுகிறது என கேட்கப்பட்ட கேள்விக்கு புலிகளின் முகாம்கள் மீது வீசும் குண்டுகள் சிலவேளை குறிதவறுவதும் உண்டு என்று மிகச்சாதாரணமாகவே கூறினார்.

ஆனால் அவர் இவ்வாறு திருவாய் மலர்ந்து பத்திரிகைகளில் அச் செய்தியின் மை உலருமுன்னே கிளாலிக் கடற்பாதையில் விமானப்படையின் குண்டுவீச்சு, ஒருவர் பலி, பலர் காயம். குண்டுவீச்சுக்கு அஞ்சி பற்றைக்குள் பதுங்கிய பெண் பாம்புக்கடிக்கு இலக்கு.

ஒருதடவை நடந்தால் குறிதவறுவதை உலகம் நம்பாது என்பதனால் பலதடவை குறிதவறுகிறது போலும்.

.52 போராளிகள் 83 ஜூலை 24,28களில் வெளிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட போதும் இதேமாதிரியான கதைகள் கூறப்பட்டது. அரசாங்கமோ அக்கொலைகள் உணர்ச்சிவசப்பட்ட கிரிமினல் கைதிகளால் மேற்கொள்ளப்பட்டது என கதையளந்தது. ஆனால் அப்படுகொலைகள் யாரால் திட்டமிட்டு நடத்தப்பட்டன என்பது பின்னர் ஊரறிந்த உண்மையாயிற்று. இச்சம்பவம் பற்றி கலாநிதி சிவசேகரனின் கவிதையொன்று விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்காவின் கதைகளைக் கேட்கும்போது, ஞாபகத்திற்கு வருகிறது.

*சற்றே விலகி*
*நந்தி வழி விட்டது போல*
*வெலிக்கடையின் சிறைக்கூட*
*இரும்பு நெடுங்கதவம்*
*தானே திறக்கும்*
*அங்கே*
*காவலர்கள் அறியாமல்*
*கற்சுவர்கள் சூழ்கின்ற*
*அறைகட்குள் கொலை நடக்கும்*
*பகுத்தறிவு ஆளுகிற*
*புதிய யுகம்*
*அற்புதங்கள்*
*ஒருக்காலோ நடந்தாலோ*
*ஒப்பார்கள் என்பதனால்*
*இருகால் நடந்தேறும்.*
*கண்டு அலுத்த*
*கற்சுவரோ மௌனிக்கும்*

இப்போது கிலாளிக் குண்டு வீச்சுக்கும் அதே தென்னை மரத்தில் புல்லுபிடுங்க ஏறிய கதைதான் சொல்லுவார்கள் இந்த பெரிய மனிதர்கள். அந்தச் சிறுவனைப்போல.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-4464

மன்னார்
☎ 023 - 2370

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

7A, 32 சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை
கொழும்பு-7
☎ 685826

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

11, Roger Salenero,
95140, Garges Les,
Gonnesse,
France.

P. Fach: 506,
Bern - 17,
Switzerland

# கிழக்கின் படுகொலைக் களங்கள்

தோழர் துரைரத்தினம்
அரசியல் பீட உறுப்பினர்

தமிழ் பேசும் மக்களை அவர்களது சொந்த பூமியில் கருவறுக்கும் வேலை எவ்வாறு திட்டமிட்டு நடாத்தப்பட்டது என்பதற்கு காரைதீவு, கல்முனை, திராய்க்கேணி, வீரமுனை பாண்டிருப்பு போன்ற பிரதேசங்கள் சான்றாக நின்று கொண்டிருக்கின்றன. வளமும், தன்னிறைவும் சமூகத்தை வழிநடத்தும் ஆற்றல் கொண்ட அறிவாளிகளையும் ஈன்றெடுத்த இப்பிரதேசங்கள் இன்று இனமோதல், படை நடவடிக்கைகளினால் மரணங்களையும் அகதி வாழ்க்கையையும் அன்றாடம் கண்டு கொண்டிருக்கும் பகுதிகளாக மாறியுள்ளன.

மக்களைப் பிரித்து தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயலும் அரசு, ஆதிக்கச் சக்திகளால் காலாதிகாலமாக ஐக்கியமாக வாழ்ந்து வரும் இப்பகுதி மக்கள் மத்தியில் இனமோதல்கள் திட்டமிட்டு நடாத்தப் பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. குறைந்தது 3 வருடத்திற்கு ஒரு தடவை இப்பகுதி மக்கள் தாக்குதல்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். இதன் விளைவாக பொருளாதார ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் மிக மோசமான பின்னடைவுகளை சந்திக்க நேர்ந்துள்ளது. விவசாயம், தொழில்துறை, கல்வி என மக்களின் ஜீவநாடியான அனைத்து துறைகளுமே ஸ்தம்பிதம் அடைந்தன. வருடக் கணக்கில் அகதி வாழ்க்கை இப்பகுதி மக்களை மனோ ரீதியாவும் உடல் ரீதியாகவும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டாண்டு காலமாக இப்பகு தியில் வளர்ந்துவரும் மக்கள் தமது சொந்தப் பிரதேசத்திலிருந்து வேருடனும் வேரடி மண்ணுடனும் பெயர்க்கப்பட்டதுதான் மிகவும் துயரமானது.

**கடந்த 3 வருடங்களில் இனமோதலை உருவாக்கும் சக்திகளாலும், ஊர்காவல் படை என்ற பெயரில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டஆயுதக் குழுக்களாலும், இராணுவ முற்றுகை, மற்றும் நடவடிக்கைகளாலும் வீரமுனைப் பகுதியில் 160 பேரும், காரைதீவில் 120 பேரும், திராய்க்கேணியில் 65 பேரும், கல்முனை, பாண்டி ருப்பு பகுதியில் 240இற்கு மேற்பட்டோரும் படுகொலை செய்யப்பட்டனர். குறிப்பாக திட்டமிட்டவாறு 63 பேரை ஒரே இடத்தில் போட்டு உயிருடன் எரித்த குரூரமும், திகிலும் நிறைந்த சம்பவங்களும் இங்கு நடந்துள்ளன.**

இவை மட்டுமன்றி புனித தலமென பெயர்பெற்ற வீரமுனையில் மனித நாகரீகம், பண்பாடு ஆகியவற்றையும் புதைகுழிக்கு அனுப்பும் விதமாக பலியெடுப்புக்கள் நடந்தன. இத்தகைய ஒரு சம்பவத்தில் காயமடைந்த ஒரு மனிதன் குற்றுயிரும் குறை உயிருமாக இருந்து 2 நாட்களாக எவ்வித வைத்திய வசதிகளற்ற நிலையில் உயிர்நீத்த மனதை உருக்கும் சமபவங்களும் நிகழ்ந்துள்ளன.

இதேபோல திராய்க்கேணி கிராமத்தை ஆயுதபாணிகள் சுற்றிவளைத்து படுகொலைகள் செய்த சம்பவங்களும் இருக்கின்றன. இக்கிராமத்தில் வரலாற்று புகழ்மிக்க "மடத்தடி அம்மன் ஆலயம்"அமைந்திருக்கிறது. இந்த அம்மாள் இப்பகுதி மக்களைப் பொறுத்தவரை இம்மக்களின் நம்பிக்கைக்குரிய ஸ்தலமாகவும் கருதப்பட்டது. இப்போது இந்த ஆலயமே நிர்க்கதியில் நின்று கொண்டிருக்கிறது.

தற்போது இக்கிராமம் மக்களை இழந்து, வீடுவாசல்களை இழந்து, அணைத்து உடமைகளையும் இழந்து பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. இக்கிராமம் இன்று ஒரு அனாதையாகக் காட்சியளிக்கிறது.

வீரமுனை, காரைதீவு, திராய்க்கேணி, பாண்டிருப்பு, அட்டைப் பள்ளம், கல்முனை போன்ற கிராமங்கள் 3 வருடத்திற்கொரு தடவை இனவாத சக்திகளில் மீண்டும் மீண்டும் அழிக்கப்பட்ட போதும் இப்பகுதி மக்கள் தமது சொந்தக் கடின உழைப்பினால் மீண்டும் மீண்டும் புனரமைக்க முயன்றார்கள். அவர்கள் இவ்வாறு சலியாது போராடியயும் 1993ம் ஆண்டளவில் ஏற்பட்ட பாரிய இன அழிப்பு நடவடிக் கைகளின் போது அனைத்தையும் இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப் பட்டார்கள்.

கடல்வளம், குளங்கள், மற்றும் வளமான பயிர்ச் செய்கை நிலங்களையும் கொண்ட இப்பிரதேசங்கள் கல்வி வளர்ச்சியிலும் குறிப்பிடத் தக்கதொரு ஸ்தானத்திலிருந்தன. மக்களுக்கு வழிகாட்டக்கூடிய ஆளுமை கொண்ட தலைவர்கள், ஞானிகள் பலர் இப்பகுதியைப் பிறப்பிடமாக்க கொண்டவர்கள். இதற்குப் பல வரலாற்றுச் சான்றுகளும் உண்டு.

**ஆனால் தற்போது அகதி முகாம் வாழ்க்கை, நிவாரணங்களோ, நஸ்டஈடு களோ வழங்கப்படாத நிலை, சுகாதாரச் சீர்கேடுகள், பெயருக்கு வைத்தியசாலை இருக்கும் நிலை, தமது நம்பிக்கைகளின் சின்னங்களாக விளங்கும் ஆலயங்களின் சிதைவு. கிராமிய நிலங்களின் அழிவு, தமது ஆற்றல்கள் எதையுமே வெளிப்படுத்த முடியாத நிலை, வசதிகள் பற்றாக்குறைகள் நிலையில் கல்வித்தர நிலை இழப்பு, விவசாயக் காணிகள் இருந்தும் பயிரிடமுடியாத நிலை, குடிமனைகள் அழிவு, உயிருக்கோ உடமைக்கோ எந்த உத்தரவாதமுமற்ற பாதுகாப்பில்லாத சூழ்நிலையில் ஏதோ பிறந்து விட்டோம் வளரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் வாழ்க்கை நடத்த வேண்டிய கொடுமையான நிலை. அரிது அரிது மானி டராதல் அரிது என்பார்கள். இங்கு ஏன் மானிடராய் பிறந்தோம் என்று சலித்து வேதனையுறுமளவுக்கு மனிதம் துவம்சம் செய்யப்படுகிறது.**

குறிப்பாக சம்மாந்துறையிலுள்ள தமிழ்ப் பகுதியை யாரும் சென்று பார்ப்பதற்குக்கூட உரிமை கிடையாது. இப்பகுதியில் புகழ்பெற்ற தேவாலயங்களும் இருக்கின்றன. இப்பகுதி மக்களைப் பொறுத்தவரை இலங்கையில் சட்டபூர்வமான அரசொன்றிருப்பதானால் எந்த விதமான பலாபலன்களும் கிட்டவில்லை. வேலியே பயிரை மேய்ந்த கதையாக ஆட்சியாளர்கள் நடந்துகொள்ளும்போது அவர்கள் எவ்வாறு இவ் அரசுமீது நம்பிக்கை வைக்க முடியும். இத்தகைய அவல நிலையை உருவாக்கியவர்களிடம் எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்? இப்பகுதியில் இம்மக்கள் நிரந்தரமாக இருக்கக்கூடாது என்பதே அரசின் நோக்கமாக இருக்கிறது. அதற்காக அனைத்து விதமான அயோக்கியத்தனமான செயற்பாடுகளிலும் அது இறங்கி உள்ளது.

**ஒரு சமூகத்தின் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது என்ற பெயரால் இன்னொரு சமூகத்தின் சுதந்திரமும், தனித்துவமும் பறிக்கப்படுகிறது.**

மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைக்கான சிவில் நிர்வாக அமைப்புக்கள் கூட இங்கு செயற்படுத்தப்படுவதில்லை. வீரமுனை, அன்னமலை,, மல்வத்தைப் பகுதியை உள்ளடக்கிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு, காரைதீவுப் பகுதி கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கான பிரதேச சபை, கல்முனைப் பகுதி தமிழ் பிரதேச செயலகம் ஆகிய மக்களின் அற்ப கோரிக்கைகள்கூட அலட்சியப் படுத்தப் படுகின்றன.


இத்தகைய அலுவலகங்களை ஏன் அமைக்க முடியவில்லை. இப்படிப் பட்ட சூழல் நிலவும் வேறு இடங்களில் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள அதேவேளை ஏன் இப்பகுதிக்கு மாத்திரம் வழங்கப் படவில்லை. அப்பட்டமான சிங்கள ஆக்கிரமிப்பு நோக்கங்களை நிறைவேற்ற அங்கு பாரம்பரியமாக வாழும் மக்களை மோதவிட வேண்டும். அரசின் நடவடிக்கைகளை உற்று நோக்கும் போது நாம் வேறு விதமாகச் சிந்திக்க முடியாது. பல துன்பங்களினுள்ளும், துயரங்களினுள்ளும் வாழும் இப்பகுதி மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

**ஒரு சமூகத்தின் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது என்ற பெயரால் இன்னுமொரு சமூகத்தின் சுதந்திரமும், தனித்துவமும் பறிக்கப்படுகிறது.**

இத்தகைய ஒருநிலையில் இப்பகுதி மக்களுக்கு போராடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. இன அழிப்பு நடவடிக்கைகள், இன மோதல் ஆகியவற்றில் பஞ்சம், அகதி வாழ்க்கை, மரணம் ஆகியவற்றை அன்றாடம் சந்தித்துக் கொண்டிருக்கும், மெதுவாக மரணித்துக் கொண்டிருக்கும் இப்பிரதேசங்களின் நிலை தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

• • • • • • • • • • • •

## சகுனம் சாவுமணி




பாதை மாறிவிட்ட
போலிப் புரட்சிக் கொடிகளெல்லாம்
துரோகக் கடலில் மூழ்கி
திரவியம் தேடுகின்றன.
பாவம்!
உரிமை கொடுத்து
உதவி கேட்ட
சமுதாயப் பூக்களுக்கு
சகுனம் சாவுமணி

"நாம் வாழவே எழுந்தோம்
சாவை உதைத்து
மண்ணிலெம் காலை ஆழப்பதித்து
மரணதேவதை இயற்கையாய் வந்து
வருகவென்னும் இறுதிக்
கணம்வரை,
மூக்கும் முழியுமாய் வாழவே
எழுந்தோம்"

- வ.ஐ.ச. ஜெயபாலன் -

## செவ்வி

# சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்கள் தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிக்கத் தயாராகவே இருக்கிறார்கள்



செயலாளர்நாயகம் தோழர் க.பிரேமச்சந்திரன் லங்காதீப வுக்களித்த செவ்வியிலிருந்து...

**? இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் அணுகுமுறையை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்? விரிவாகக் கூறமுடியுமா?**

! முதலாவதாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இவ்வரசாங்கத்திற்கு, அரசியல் துணிச்சல் இல்லை என்றே நான் கருதுகின்றேன். பிரச்சினையை தீர்ப்பதில் உண்மையாகவே இவர்களுக்கு அக்கறை இருப்பின் அந்தத் துணிச்சலை இவர்கள் முதலில் காட்டவேண்டும். சர்வகட்சி மகாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு, போன்ற சில வழிமுறைகளை அரசாங்கம் ஆரம்பித்த போதும்கூட மிகவும் எழுந்தமானமாகவும் அதற்கான முக்கியத்துவமும், நேர்மையும் அரசாங்கத்தால் கொடுக்கப்படாமையால் அதுவும் ஓர் நிரந்தரமான தீர்வுக்கு வழிகாட்டவில்லை.

சிங்கள அரசியல் தலமைப்பீடமானது தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்காமல், அரசியல் தீர்வொன்றை சிங்கள மக்கள் எதிர்க்கின்றார்கள் என்ற போலியான காரணத்தைச் சொல்லி பழியை அவர்கள்மீது போடுகிறார்கள். ஆனால் நிரந்தரமான சமாதானத்தை உருவாக்குவதற்காக தமிழ் மக்களுக்கு சுயாட்சியை வழங்க சிங்களமக்கள் எதிர்ப்பில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று காண்பதற்கான சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் இருந்தும்கூட அச் சந்தர்ப்பங்களைப் பாவிக்க அரசாங்கம் தவறிவிட்டது. இது ஓர் முக்கியமான விடயமாகையால் இதனைச் சிறிது விரிவாகக் கூற விரும்புகின்றேன்.

முதலாவதாக, நியாயமாகவும், சட்டபூர்வமர்கவும் தெரிவு செய்யப் பட்ட வடகிழக்கு மாகாணசபையை மறைந்த ஜனாதிபதி அவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கூட்டுச் சேர்ந்து சீர்குலைத்ததோடு மட்டுமல்லாமல் புலிகளை மீண்டும் ஆயுதபாணியாக்கினார். அத்துடன் 13வது திருத்தச்சட்டத்தை சரியாக அமுலாக்கத் தவறியதன் மூலம், அதிகாரப் பகிர்தலை சீர்குலைத்தார். ஆனால் இன்றய ஜனாதிபதி விஜேதுங்க அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் மட்டுமே இந்நாட்டில் உள்ள ஒரே பிரச்சினை, மாகாணசபைகள் என்பன மத்திய அரசின் கொள்கைகள் திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனங்கள் மட்டுமே என்றே கூறிவருகிறார். இன்நாட்டில் இனப்பிரச்சனை என்று ஒன்று உள்ளது, அதற்கான தீர்வு அதிகாரப்பகிர்வு என்பதையும் இவரது கூற்று மறுதலிக்கின்றது. மறுபக்கத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரையை தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இது அரசாங்கத்துக்குள் உள்ள முரண்பாடுகளைக் காட்டுகின்றது. இது இப்படியே தொடர முடியாது. பல ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ் இளைஞர்களை பலி கொடுத்தும், பல கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்தும், தேசிய பொருளாதாரத்தை அரித்துக் கொண்டிருக்கும் இந்த தேசிய இனப்பிரச்சினைக்கு, ஓர் நிரந்தர அரசியல் தீர்வைக்காண உண்மையிலேயே இவ்வரசு விரும்பினால் ஈ.பிஆர்.எல்.எப் போன்ற தமிழ் கட்சிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பாக ஈ.பி.ஆர்.எல்.எப் உம் ஏனைய தமிழ் அரசியல்-இராணுவ அமைப்புக்களும் ஓர் சுதந்திரமான தனிநாட்டுக்காக போராடியவர்கள் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். பிரிவினைக்கு மாற்றீடாக தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் தீர்வினை முன்வைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு வந்தோம். ஆனால் அந்த நம்பிக்கை பொய்த்து விட்டது. இச்சூழ்நிலை தொடரும்பட்சத்தில் இந்நாட்டின் ஒற்றுமையும், இறைமையும், கேள்விக்குரியதாகவே இருக்கும். உண்மையிலேயே இந்நாடு சிதைந்து போய்க்கொண்டிருக்கையில், இராணுவத் தீர்வைப்பற்றி இவ்வரசு பேசுவது வியப்புக்குரியதாய் உள்ளது. நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை, தார்ப்பரியத்தை அரசாங்கம் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கு இவ்வரசு எதையும் செய்யத் தயங்காது. ஒரு பாராளுமன்ற அங்கத்தவனாக இருந்த அனுபவத்தின் அடிப்படையில் இதை மட்டும்தான் உறுதியாகச் சொல்ல முடியும்.

**? அப்படியாயின் ஓர் சரியான தீர்வொன்றைக் காண்பதற்கு உங்கள் கருத்தின்படி என்ன செய்யப்பட வேண்டும்?**

! மூலாவதாக அரசியல் நேர்மையும், தீர்வைக் காண்பதற்கான விருப்பமும் தேவை. மாறாக சந்தர்ப்பவாதத்தையும் நேர்மையீனத்தையுமே காணமுடிகின்றது. அரசியல் நேர்மையும் ஆர்வமும் இல்லாமல் பிரச்சினையை எதிர்கொள்ளும்போது அது வலுவிழக்கப்பட்டு, திரிபுபடுத்தப்பட்டு, இவற்றைச் செய்தால் பதவி பறிபோய்விடுமா என்பதிலேயே வந்து முடிகின்றது. இப்படியான பயத்தினாலேயே எமது கடந்த காலம் எதுவுமே செய்யாமல் பயனற்றதாய் போய் உள்ளது. அத்துடன் இவ்வரசாங்கம் தனது இராணுவத்தின் இயலாமையும், இராணுவத்திறகான ஆட்பற்றாக்குறையையும் உணர்ந்தபோது, மக்களை ஏமாற்றத் தொடங்கியது. வடமாகாணத்தில் உள்ள இராணுவச் சமநிலையை தனக்கு சாதகமாக மாற்ற முடியவில்லை என்பதை இராணுவம் பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள்ளது. "இவ்விரத்தக்களரியை தொடர்சியாகப் பார்த்துப் பார்த்து எனக்கு அலுத்துவிட்டது" என்ற ஏயார் மார்ஷல் டெரன்ஸ் பெர்னாண்டோவின் அண்மைய கூற்றே எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. இதே வேளை யுத்தம் புரியமுடியாத இராணுவத்துக்கு தலமை தாங்குவதை நான் விரும்பவில்லை' என முன்னாள் இராணுவத்தளபதி தனது இராஜினாமாவின் போது குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய இச்சூழ்நிலையில், வடக்கில் நடத்தப்படும் வகைதொகையற்ற, கண்மூடித்தனமாக விமான குண்டு வீச்சுக்களும் அதனால் ஏற்பட்டுவரும் பாரிய மனித இழப்புக்களும் இவ்வியலாமையின் விளைவே. புலி இயக்கத்தின் முகாம்களோ அன்றித் தளங்களோ இக்குண்டு வீச்சுக்களில் பாதிக்கப்படுவது மிகக் குறைவாகும். புலிகளைத் தண்டிக்கின்றோம் என்ற போர்வையில் தமிழ் மக்களே ஒட்டுமொத்தமாகத் தண்டிக்கப்படுகின்றார்கள். இது தமிழ் மக்களை மேலும் அந்நியப்படுத்தி புலிகளின் பக்கம் தமிழ் மக்களை தள்ளிவிடவே வழிவகுக்கும். இவ்வரசு உண்மையிலேயே புலிப் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க விரும்பினால், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைப்பது அவசியமானதாகும்.

ஆனால் அரசு இதை தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருவதால் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணுவதற்கு மூன்றாவது சக்தியின் தலையீடு தவிர்க்க முடியாததும், இன்றியமையாததுமாகும். இந்தியா, பிராந்திய அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை, பொதுநலவாய அமைப்பு போன்ற அமைப்புக்களின் ஒத்துழைப்பும் தலையீடுமே ஓர் நிரந்தரமான தீர்வைக் கொண்டு வருவதற்கான ஒரே மார்க்கமாகுமென நான் கருதுகின்றேன்.

**? வடகிழக்கு பிரச்சினை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எப் இற்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறமுடியுமா?**

! இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வட-கிழக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பை, தேர்தலில் கிடைத்த வெற்றியின் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எப் ஏற்றுக் கொண்டது. ஆனால் இம்மாகாண அரசு மத்திய அரசினதும், புலிகளினதும் கூட்டு முயற்சியால் சீர்குலைக்கப்பட்டது. ஜேவிபியைவிட தன்னை பெரும் தேசபக்தனாக காட்டிக் கொள்ள விரும்பிய பிரேமதாசாவுக்கு இந்திய அமைதிகாக்கும் படை ஓர் தலையிடியாகவே இருந்து வந்தது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

**பிரிவினைக்கு மாற்றீடாக தமிழ் மக்களின் நியாயமான அபிலாகைளைப் பூர்த்தி செய்யும் ஓர் தீர்வினை முன்வைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு வந்தோம். ஆனால் அந்த நம்பிக்கையும் பொய்த்துவிட்டது.**



# கொழும்பு சமாதானத் தூதுக்கள் யாழ்ப்பாணம்

கடந்த ஒருமாதகாலமாக சமாதான முயற்சிகள் பற்றியசெய்திகளும் பேச்சுக்களும் அடிபடுகின்றன. கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த மார்க்கஸ் பெர்னாண்டோ அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த கென்னத் பெர்னாண்டோ சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஆரியரட்ன ஆகியோர் சமாதானத் தூதுவர்களாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று வந்தனர்.

மக்களின் கஸ்டமான வாழ்க்கை, ஆண்டாண்டு காலமாக இலங்கையின் ஏனைய இன மக்களுடன் ஐக்கியமாக வாழ்ந்த தமிழ் மக்கள் மீது இனவாதச் சூறாவளி ஏற்படுத்திய சேதாரம் எத்தகையது என்பதை அவர்கள் பரிவுடன் அவதானித்தார்கள்.

தெற்கில் இனவாதம் கரைபுரண்டோடும்போது அங்கும் மனிதர்கள் வாழ்கிறார்கள் அங்கும் இதயங்கள் இருக்கின்றன. சமாதானத்திற்கான ஏக்கம் இருக்கிறது என்ற செய்தியை தெற்கிற்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சமாதானத்தின் கதவுகள் திறந்திருப்பதாக புலிகளும் சிங்கள ஆட்சியாளர்களும் அடிக்கடி அறிக்கை விடுகிறார்கள். ஆனால் இருதரப்பாருமே மக்களுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய பாரிய யுத்தம் ஒன்றிற்கான தயாரிப்புக்களில் முனைப்புடன் ஈடுபட்டு இருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் சமாதானத் தூதுக்கள் வரவேற்கப்பட வேண்டியவை. பாராட்டப்பட வேண்டியவை ஆனால் சிங்கள அரசினதும் புலிகளதும் சொந்த நலன்களோடு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு இத்தூதுக்கள் பலம் சேர்த்துவிடக் கூடாது என்பதே எமது பேரவா ஆகும். அரசைப் பொறுத்தவரை அது சர்வதேச ரீதியாக முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்கும் பிரச்சினைகளை இழுத்தடிப்பதற்கும் அது உதவலாம்.

**ஒரே தடவையிலான மேம்போக்கான அவதானிப்புடன் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள்தான் எனப் பேசுவதும் சிங்கள அரசும் புலிகளும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் சரி என்று பார்ப்பதும் தூரதிருஸ்டியற அனுபவக்குறைவான ஒரு பார்வையாகும்.**

புலிகளைப் பொறுத்தவரை புலிகள் இயக்கத்தினுள்ளும் வடக்கு கிழக்கிலும் அங்குள்ள மக்கள் மீதும் அதன் மனித உரிமை மீறல் செயற்பாடுகளினால் ஏற்பட்டுள்ள களங்கத்தை துடைப்பதற்கு இச்சமாதான தூதுக்களை ஒரு பிரச்சார சாதனமாகப் பயன்படுத்தலாம்.

சர்வதேச பத்திரிகையாளர்கள், அவதானிப்பாளர்கள், சமாதானத் தூதுவர்கள் என யார் முன்வந்தாலும் சிலவேளைகளில் அரசியல் வாதிகளும் படையினரும் அவர்கள் வடபகுதி செல்வதற்கு ஆர்வத்துடன் உதவிபுரிபவர்கள் போல் காட்டிக் கொள்வார்கள். அவர்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாக பெரும் அக்கறை கொண்டவர்கள் போல் கவலைப்படுவார்கள். மறுபக்கம் ஆஸ்பத்திரி மீதும் மக்களின் கடல் வழிப் பாதையிலும் தேவாலயங்கள் மீதும் குண்டுகளை வீசுவார்கள்.

புலிகளும் அப்படித்தான். சமாதானத் தூதுவர்கள் செல்லும்போது வீதியில் ஒருவருமே ஆயுதங்களுடன் நிற்கமாட்டார்கள். சமாதான விரும்பிகளாக, அகிம்சா மூர்த்திகளாக காட்டிக் கொள்வார்கள். ஆனால் அவர்களின் வதைமுகாமில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட மனிதன் சித்தசுவாதீனமாக நிர்வாணமாக நின்றுகொண்டிருப்பான்.

**உண்மையான சமாதானம் வெறுமனே யுத்தம் புரியும் இருதரப்புக்குமிடையே மத நிறுவனங்களைச் சார்ந்த துறவிகளின் முன்முயற்சியில் மாத்திரம் வந்துவிடாது. சமாதானத்தில் ஆர்வம் கொண்ட அனைத்து சக்திகளும் இங்கு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அத்தகைய சக்திகளின் முன்முயற்சியிலேயே யுத்தம் புரியும் சக்திகள் மீது சமாதானத்திற்கான நிர்ப்பந்தத்தைக் கொண்டுவர முடியும்.**

அல்லாமல் ஒரே தடவையிலான மேம்போக்கான அவதானிப்புடன் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள்தான் எனப் பேசுவதும் சிங்கள அரசும் புலிகளும் ஓர் உடன் பாட்டுக்கு வந்தால் சரியென்று பார்ப்பதும் தூரதிருஸ்டியற்ற அனுபவக்குறைவான ஒரு பார்வையாகும்.

தமிழ் பேசும் மக்களின் நலன்களில் அக்கறையுள்ள பல்வேறு அரசியல் இயக்கங்கள், ஜனநாயக சக்திகள், மனித உரிமைவாதிகள் அறிவுஜீவிகளைப் புறக்கணித்து மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் எத்தகைய பலனைத்தரும் என்பது கேள்விக்குறிய விடயமாகும்.

யாழ்ப்பாணத்துக்கு யாராவது விஜயம் செய்வது புலிகளுடன்-பேசிவிட்டு கொழும்பு வந்து அவர்களைப் பற்றி மிகைப்பட புகழ்வதும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அவர்கள் தான் எனப் பேசுவதும் ஒரு மாமூலான சூத்திரமாகிவிட்டது. பிரச்சினைகள் இங்கு நிதானமாகவும் பகுத்தறிவுபூர்வமாகவும் அணுகப்பட வேண்டும்.

தெற்கில் அதி உயர் பதவியில் இருப்போர் மனம்போன போக்கில் கண்மூடித்தனமாக பொறுப்பற்ற முறையில் புத்தி சாதுர்யமற்றவாறு இனவாதப் பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் கட்டவிழ்த்து வரும் போது சமயத்துறவிகளின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையே. இதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை. ஆனால் பிரச்சினையின் சகல பரிமாணங்களையும் கருத்திற்கெடுத்து செயற்பட வேண்டுமென்பதே சமாதான விரும்பிகளின் பேரவா ஆகும்.


# கனடியர்களின் சமாதான முயற்சி


இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமான் அவர்களை ஈழத்தமிழர் நலனில் அக்கறையுள்ள கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று கனடாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வழைப்பையிட்டு சிங்கள ஆட்சியாளர்களும் ஏனைய பேரினவாதிகளும் மனக்கிலேசம் அடைந்துள்ளனர். கனடாவில் பிரான்ஸ் மொழி பேசும் மக்கள் கணிசமாக வாழும் கியூபெக் மாகாண பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவர்கள் எவ்வாறு ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட முடிமென்று டி பி விஜயதுங்கா சிங்களக் கிராமங்களில் பொதுக்கூட்டங்களில் கேட்கிறார். ஏறத்தாழ ஒரு லட்சம் தமிழர்கள் அங்கு அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கை கனடாவிடமிருந்து உதவிபெறும் நாடுகளில் ஒன்று. அந்தவகையில் கனடியப் பிரைஜகளுக்கு ஈழத்தமிழர் பிரச்சினை அக்கறைக்குரிய ஒன்றாக இருக்க முடியும். இலங்கையின் எல்லாவித அத்தியாவசியத் தேவைகளுக்காகவும் உலகம் முழுவதும் வெட்கம் ரோசமின்றி பிச்சையெடுக்கத் தெரிகிறது. மக்களை அழிக்கும் நவீன, கனரக ஆயுதங்களை வாங்கி குவிக்கத் தெரிகிறது. ஆனால் தமது சொந்த நாட்டில் இவர்களால் திட்டமிட்டு அழிக்கப்படும் தமிழினத்தைப்பற்றி பிறநாட்டான் பேசக்கூடாது. தமிழருக்காக யாராவது குரல்கொடுத்தால் மாத்திரம் இறைமை தேசபக்தி என்று கூக்குரலிடுகிறார்கள். இதில் பிரேமதாசாவுக்கோ டிகிரி பண்டாவுக்கோ எந்த வித்தியாசமுமில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது பிரேமதாசாவும், ஏனைய பேரினவாத சக்திகளும் அந்நிய தலையீடு பற்றி பெரிதாகச் சத்தமிட்டார்கள்.

ஆனால் நாட்டில் சிறுவர்கள் பாலியல் தேவைகளுக்காக உல்லாச பிரயாணிகளால் பயன்படுத்தப்படுவது பெண்கள் பண்டங்கள் போல் விற்கப்படுவது, நாட்டின் வளங்களை வெளிநாட்டு தொழில்துறை நிறுவனங்கள் சூறையாடுவது, போதைவஸ்துக்கள் நாட்டினுள் வந்து குவிவது, லட்சக்கணக்கான தமிழ் மக்கள் உலகம் முழுவதும் அலைந்து கொண்டிருப்பது, இவை தொடர்பாக இவர்கள் வாய் திறப்பதுமில்லை. இந்தக் கொடுமைகள் இவர்களை உணர்ச்சி வசப்படுத்துவதுமில்லை.

ஆனால் தமிழ் மக்களின் நலன்கள் அல்லது அவர்களின் அவலங்கள் தொடர்பாக பிறநாட்டார் யாராவது அக்கறை செலுத்தினால் உடனடியாகவே அந்நியத் தலையீடு என்று இவர்களின் மண்டைக்குள் அடங்கியிருக்கும் இனவாதப் பிசாசு உருவெடுத்து ஆடுகிறது.






மனிதாபிமானம், சகவாழ்வு, சுதந்திரம் ஆகிய பெறுமானம்மிக்க கருத்துக்கள் சுடுகாட்டுக் கனுப்பப்படும் வேளையில் நம்பிக்கை வெளிச்சங்களாக இருந்த போர்க்குணம்மிக்க மனிதர்கள் பலர் கடந்து வந்த தசாப்தத்தில் தம் இன்னுயிரைப் பலிகொடுத்தார்கள். இவற்றுக்காக மரணித்தவர்களில் தென்னிலங்கையின் பிரபல பத்திரிகையாளரும், கவிஞரும், நாடகக் கலைஞரும் செய்தி வாசிப்பாளருமான ரிச்சார்ட் டீ சொய்சாவும், வடக்கில் தலைசிறந்த பெண்ணிலைவாதியும், வைத்திய பீடப் போதனாசிரியருமான ரஜனிதிரணகமவும் கொடுமைகளுக் கெதிரான மானிட நேயத்தின் சின்னங்களாகத் திகழ்ந்தார்கள்.

ரிச்சார்ட் 1989ம் ஆண்டில் தனது வீட்டிலிருந்து சிவில் உடைதரித்த ரயர்மாலை புகழ் பயங்கரவாதிகளால் அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் அவர் வீட்டுக்குத் திரும்பவேயில்லை. ஒருசில நாட்களின்பின் அவரது உயிரற்ற உடல் மொறட்டுவ கடற்கரையில் ஒதுங்கியது.


ரஜனி திரணகம வட-கிழக்கின் உள்ளூர் பாசிச சக்திகளான புலிகளால் யாழ் மருத்துவக் கல்லூரி வாசலில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

ஏறத்தாள 4 வருடங்கள் உருணடோடி விட்டன. ரிச்சார்ட்டின் உயிரற்ற உடல் கண்டெடுக்கப்பட்ட கடற்கரையின் அருகே பெப்ரவரி 21 காலை 8.30 மணியளவில் உள்ளூர் சர்வதேச பத்திரிகையாளர்கள், மனித உரிமைவாதிகள் ஒன்று கூடினர். விலங்கிடப்பட்ட பேனா ஞாபகார்த்த நினைவு ஸ்தூபியின் மேல் குத்திட்டு உயர்ந்து நின்றது. அருகே ரிச்சார்ட்டினதும், ரஜனியினதும் படங்கள், சூரியப் பின்புலத்தில் உயிரோவியமாய் மௌன காட்சியங்களாய் வைக்கப்பட்டிருந்தன.

சர்வதேச அவதானிப்பாளர்கள் என்று கறுப்பில் எழுதப்பட்ட மஞ்சல் பட்டி அணிந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும், மனித உரிமைவாதிகளும் எறும்புகள் போல் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந் தார்கள்.

பிரபல பத்திரிகையாளர் லூசியன் கருணாநாயக்கா சிங்கள மொழியிலும், ஆங்கிலத்திலும் ஆவேசமாக உரையாற்றிக் கொண்டிருந்தார். ரிச்சார்ட்டினதும், ரஜனியினதும் படங்கள் பொறிக்கப்பட்ட ரீசேர்ட்டுக்கள் அணிந்த இளைஞர்களும் மாதர்களும் கைகளிலே இம்மனித உரிமைவாதிகளின் ஓவியங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளுடன் நின்றிருந்தனர். இந்த ஆரவாரங்களின் மத்தியில் இனம்புரியாத சோகம் கலந்த அமைதி நிலவியது.

தம் பிள்ளைகளைப் பறிகொடுத்த ஆயிரக்கணக்கான அம்மாக்களை ஞாபகத்திற்கு கொண்டுவரும் விதத்தில் ரிச்சார்ட்டின் அம்மா மனோ



ராணி சரவணமுத்து சோகமே உருவாய் நின்றிருந்தார்.

மொட்டவிழாத் தாமரைகள் ரிச்சார்ட்டினதும் ரஜனியினதும் படங்களுக்கு முன்னே குவிந்திருந்தன. உயிர்க் கொலைகளுக்கு அன்னியமான பௌத்த மதத்தின் பிதாமகன் அந்தப் போதிமாதவனுக்கு சிங்கள மக்கள் இந்த மொட்டுக்களை வைத்துத்தான் வழிபடுவார்கள். ஆனால் இங்கு பௌத்த சிங்கள இனவெறியும், தமிழ்க் குறுந்தேசிய வெறியும் குரூரமாகப் பலி கொண்டவர்களுக்கு மொட்டுக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. வெண்ணாடை அணிந்து மலராத மொட்டுக்களை புதுயுகம் மலர்விக்கும் லட்சியத்திற்காக மரணித்தவர்களுக்கு வரிசையாகச் சென்று வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

"பயத்திலிருந்து விடுபடுவோம்" என்பது இந்த ஞாபகார்த்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்களின் கோசமாக இருந்தது. மிகமுக்கியமான விடயமிது. எங்கும் அச்சம். ரயர்மாலைகளையும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையையும் கண்டு அஞ்சிக் கொண்டிருக்கும் நிலை எமது சமூகத்தில்.

புகைந்து கொண்டிருந்த சமாதானத் தீப்பந்தம் எரியத் தொடங்கியது. 2 சமாதானப் பறவைகளான ஒரு இளைஞனும், யுவதியும் அச்சமாதானச் சுடரை ஏந்தி வீதிக்கு வந்தனர். பொலீஸ் ஜீப், ட்ரக் வண்டிகளும், மனிதர்களை மாத்திரம் ஏற்றி அழைத்துச் செல்வதற்கென தயாரிக்கப்பட்ட நாய்க்கூண்டு வண்டிகளும் தெருக்களை அடைத்தன. ரஜனியினதும், ரிச்சார்ட்டினதும் ஓவியங்கள் பொறிக்கப்பட்ட கொடிகள் கடற்கரைக் காற்றில் சடசடக்க இளைஞர்களும், மாதர்களும் மனிதாபிமான ஆவேசம் தொனிக்கும் பாடல்களை இசைத்தார்கள். தமது உறவுகளின் கல்லறைக்கு கரிய உடை அணிந்து மெழுகுதிரி ஏந்திச் செல்லும் மக்களின் சோகமும், மனிதாபிமானத்தின் வீரியமிக்க குரலும் சமூக அவலமும் ஒலிப்பதாக மொழி புரியாவிட்டாலும் என் உள்ளுணர்வு கூறியது.

ஏதோ நடக்கக்கூடாதது நடக்கிறது என்பது போல் சட்டத்தின் பாதுகாவலர்கள் வீதியை அடைத்து நிற்கிறார்கள். அந்தச் சாலை விடைபெறும் நேரம் காலிவீதி ஜன நெரிசலில் தவித்தது. பொலிசாரின் கெடுபிடிகளுக் கெதிராக மனித உரிமைவாதிகள் சுட்டெரிக்கும் வெயிலில் வீதியில் உட்கார்ந்து, உருண்டு மறியல் செய்தார்கள்.

பதாதைகள் தாங்கிய வண்டியில் நிறைந்திருந்த பல்கலைக்கழக மாணவர்களும் இளைஞர்களும் வேலைவாய்ப்பற்ற எதிர்காலத்தைப் பற்றியும், மரணத்தைப் பற்றியும் விசனித்து உச்சஸ்தாயில் பாடிக் கொண்டிருந்தார்கள்.

பொலீசாரின் தொகை அதிகரித்துக் கொண்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் நந்தமித்திர ஏக்கநாயக்க (ஸ்ரீ.ல.சு.க), தோழர் க.பிரேமச்சந்திரன் (செயலாளர் நாயகம் ஈ.ம.பு.வி.மு), ராஜா கொல்லூரே (ஸ்ரீ.ல.சு.க.) மாகாண சபை உறுப்பினர் இந்திக குணவர்த்தன, யுக்திய பத்திரிகையாளர்கள் சுனந்த தேசப்பிரிய, ஜோ செனவிரட்ன ஆகியோர் இவ் ஊர்வலத்தின் தாற்பரியத்தை பொலிசாருக்கு விளக்கியதோடு ஏன் தடை செய்கிறீர்கள் என்று வினவினர். ஆனால் அவர்.கள் வாயே திறக்கவில்லை. அவர்களுக்குப் புரியவில்லையோ என்னவோ!

"சமாதானத் தீப்பந்தத்தைப் பிடுங்கி அணைத்தார்கள். இதை அணைத்தால் எல்லாம் அணைந்துவிடும்மென நினைத்தார்கள் போலும். கொடிகள் பதாதைகள் கொண்டு செல்ல முடியாது. ஊர்வலமாகச் செல்ல முடியாது. வாகனங்களில் செல்ல முடியாது. என்று தடுத்தார்கள். வீதிக்குக் குறுக்கே பொலீஸ் வாகனங்களை நிறுத்தினார்கள்.பொலீஸ் வளையத்தை நெருங்கி ஊர்வலம் அங்குலம் அங்குலமாக முன்னேறியது. அவர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசப்போவதாக பாவனை செய்தார்கள். ஆனால் போராட்டம் 2 மணி நேரத்திற்கு மேலாகத் தொடர்ந்தது.

அருகே இருந்த ரெயில்வேத் தண்டவாளம் வேறு பாதைகளினூடாக ஊர்வலத்தினர் விகாரமகாதேவி பூங்கா நோக்கி சுட்டெரிக்கும் வெயிலில் பதாதைகளை உயர்த்தி நடந்தார்கள். சிலுவை சுமந்த யேசுவைப் போல.

விகாரமகாதேவி பூங்காவில் செந்நிறத் திரையின் முன்னே ரிச்சார்ட், ரஜனியின் உயரமான படங்கள் வைக்கப்பட்டிருந்தன. மக்கள் வட்டக்களரியில் உட்கார்ந்திருந்தார்கள். மனிதாபிமானத்தை வலியுறுத்தும் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

பத்திரிகைகள், கவிதைப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. 10 வருட யுத்தத்தின் கோரச்சுவடுகளைப் பிரதிபலிக்கும் சுவரொட்டி, புகைப்பட புத்தக கண்காட்சியும் நடைபெற்றது.. அரச பயங்கரவாதத்தாலும், ஜே.வி.பி பயங்கரவாத்ததாலும், புலிகளின் பயங்கரவாதத்தாலும், கொல்லப்பட்ட போராளிகள், முற்போக்கு அரசியல் தலைவர்கள், மனித உரிமைவாதிகள் பல்கலைக்கழக மாணவர்களின் படங்களும் இக்கால கட்டத்தின் முக்கிய அரசியல் நிகழ்ச்சிகள், அகதி மக்களின் அவலங்கள் பற்றிய சித்தரிப்புக்களும் காணப்பட்டன.

மாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரபல இந்தியப் பத்திரிகையாளர் ராம் உட்பட பலர் உரையாற்றினர். கலை, கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பெரும்பாலும் பேரினவாத ஊர்வலங்களுக்கும், களியாட்ட நிகழ்ச்சிகளுக்கும் பெயர் பெற்ற விகாரமகாதேவி பூங்காவில் இத்தகைய ஒரு நிகழ்ச்சி விதிவிலக்காகவே அமைந்தது. ★

**"சமாதானத் தீப்பந்தத்தைப் பிடுங்கி அணைத்தார்கள். இதை அணைத்தால் எல்லாம் அணைந்துவிடுமென நினைத்தார்கள் போலும்.**



## செவ்வி

...4 ம் பக்கத் தொடர்ச்சி

அத்துடன் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும்படி ஈபிஆர்எல்எப் இனால் கொடுக்கப்பட்ட நிர்ப்பந்தமும் இன்னுமோர் தலையிடியாக இருந்தது. அதே போன்று தமிழ்மக்களின் ஏக பாதுகாவலன் தான் எனக் கருதுகின்ற புலி இயக்கத்துக்கும் இந்திய அமைதிப்படை ஓர் அச்சுறுத்தலாகவே இருந்து வந்தது. ஆனால் இந்திய அமைதிப்படையுடன் மோதலை ஆரம்பித்த பின்னர் புலி இயக்கத்தின் இருப்பே கேள்விக்குறியானது. அத்துடன் தமிழ் மக்களின் கண்களுக்கு புலிகளுக்கு மாற்றீடாக தென்பட்டு வந்த ஈபிஆர்எல்எப் இன் மாகாண அரசும் அவர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தது. இவையாவும் பிரேமதாசாவின் திட்டங்களுக்கு சாதகமாகவே அமைந்தன. அதனாலே இந்திய இராணுவத்தை திருப்பியனுப்பவும் ஈபிஆர்எல்எப் இன் வட-கிழக்கு மாகாணசபையை கலைப்பதற்கும் புலிகளும், பிரேமதாசாவும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர். அத்துடன் எவ்வித முன்நிபந்தனையுமின்றி இந்திய இராணுவத்தை திருப்பி அழைக்க புதிதாக பதவிக்கு வந்த வி.வி.சிங் அரசின் முடிவும் பிரேமதாசா, புலிகளின் திட்டத்திற்கு சாதகமாகவே அமைந்தது. வட-கிழக்கு மாகாணசபையைக் கலைத்த பின்பு வன்னிக் காட்டிற்குள் பதுங்கியிருந்த புலிகள் வட-கிழக்கெங்கும் மீண்டும் தம்மை நிலைப்படுத்திக் கொண்டனர். பிரேமதாசாவின் வேறு தேவைகட்காக கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி மகாநாடுகளிலும் புலிகள் பங்கு கொண்டனர். இவ் அனைத்துக் கட்சி மாகாநாடுகள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றிக் கூட பேசவில்லை. வேறு தமிழ் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுக்கான திட்டங்கள் யாவையும் அரசாலும், இதில் கலந்து கொண்ட ஏனைய சிங்களக் கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்டன. இதுவும் புலிகளுக்கு சாதகமாகவே அமைந்தது. மொத்தத்தில் பிரேமதாசாவின் அரசியல் நேர்மை இன்மையும், புலிகளின் சந்தர்ப்பவாதமும் இந்நாட்டில் தொடர்ந்தும் இரத்த ஆறு ஓட வழி வகுத்தன.

**?** இப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும்?

**!** முதலாவதாக இந்த நாட்டின் ஆட்சியில் ஓர் மாற்றம் ஏற்படவேண்டும். தேசிய இனப்பிரசசினைக்கு தீர்வு காணாமலேயே இவ்வரசாங்கம் 17 வருடம் ஆட்சி நடத்தியுள்ளது. இப்பிரச்சினையை தீர்க்க மாற்று அரசுகள் முன்வந்தால், அவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். ஸ்ரீ.ல.சு.க இப்பிரச்சினையை தீர்க்குமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நேர்மையாகவும், இதய சுத்தியுடனும் இப்பிரச்சினையை அணுகும் எவராலும் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சமாதானததையே விரும்புகின்றார்கள். இப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்றும் விரும்புகின்றோம்.

## சதி...

முன் பக்கத் தொடர்ச்சி

இவர்களுக்கு நாம் இடித்துரைக்க வேண்டும். சிறுபான்மை இனங்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த நாட்டையே நடத்த முடியாதென்பதை இவர்களுக்கு நாம் புரியவைக்க வேண்டும். சிறுபான்மை இனங்களோ, சிறுபான்மை தேசிய இனங்களோ எடுப்பார்க் கைப்பிள்ளைகள் அல்ல, அவர்களும் இந்நாட்டின் தூண்கள் என்பதை இவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இதற்கான இன்றைய தேவை சிறுபான்மை இனங்கள் மத்தியிலான ஐக்கியமும் ஒத்துழைப்புமே.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சில முஸ்லீம் பெரும்பான்மைப் பிரேதசங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளதென்பதற்காக தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கின்றார்கள் என்ற முடிவுக்கு வருவது தவறானது. முக்கியமான தமிழ் அரசியல் கட்சிகளும், பெரும்பான்மையான தமிழ் மக்களும் ஆளும் கட்சிக்கு எதிராக உள்ளார்கள் என்பதே உண்மையாகும். எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு காரணம் தமிழ் மக்களின் வாக்குகள் என்ற முடிவுக்குப் போகாமல், இதன்மூலம் மேலும், மேலும், இனக்குரோதங்களை உருவாக்காமல், சகல சிறுபான்மை இனங்களும் ஒன்றுபட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இதனை இன்றைய தலைவர்கள் உணர்ந்தால், அவர்களால் நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும்●

## புலிகளின் காசு புளக்கத்துக்கு வருகிறதாம்

புளிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் புதிய பணநோட்டுக்களை புளக்கத்துக்கு கொண்டு வருகிறார்களாம். இம்மாதம் 14ம் திகதியிலிருந்து மக்கள் இந்தப் பணத்தைத் தான் பயன்படுத்த வேண்டுமாம்.

நாணயமாற்று விகிதம்;


1000 ரூபா = 800ரூபா
(இலங்கைக்காசு) (புலிக்காசு)

இது மக்கள் பணத்தை மொத்தமாக தம் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் புலிகளின் தந்திரமெனப் பரவலாகப் பேசப்படுகிறது

அம்பாறை, திருமலை பகுதிகளில் பிரதேச செயலாளர்களின் அதிகாரங்கள் அரசாங்க அதிபர்களின் கைகளுக்கு மாற்றம்.

காரணம் அரசாங்க அதிபர்கள் சிங்களவர்களாகவும் பிரதேசச் செயலாளர்கள் தமிழராகவும் இருப்பதே. ஏனென்று புரிகிறதா?

## குறுக்கெழுத்துப் போட்டி- 3



### இடமிருந்து வலம்

1. ஈழ மக்களுக்காக மரணித்த ஓர் தீர்க்க தரிசனம்மிக்க இளம் தலைவர்
7. இதிலிருந்து (சர்வ?) அதிகாரம் பிறக்கிறதாம்.
15. காயம்.
23. நாள்தோறும் வருவது.
27. இந்துக்கள் புனிதமானதெனக் கருதுவது.
31. உயிரின் தொடக்கம்.
36. இதற்குத் தேர் கொடுத்தாராம் ஓர் கடையேழு வள்ளல்
41 குஷ்புவுக்கு கோயில் கட்டியவன்
55 கொழும்பில் தமிழர்கள் கட்டாயம் செய்ய வேண்டியது
61 புனிதமான இடமாகக் கருதப்படுவது
68 சமாதானத்தின் மீது தமிழ் மக்கள் இதனைக் கோண்டிருக்கிறார்கள்
71 பிரணவமந்திரம் என்பர் ( மாறி உள்ளது )
74 தேர்தல் காலத்தில் வாக்காளருக்குக் கிடைப்பது
78 பண்டிகைக் காலங்களில் எம் பெண்களின் கனவு
86 ஒருவகை உணர்ச்சிவெளிப்பாடு
93 இதன்மேல் உட்கார்ந்திருக்கும் பூனைதான் ஈரோஸ்

### மேலிருந்து கீழ்

1 இந்நாட்டின் நிறைவேற்றுத் தலைவருக்கு தமிழ்மக்களின் பிரச்சினை இப்படித் தெரிகிறது
3 மழைகாலஇருட்டென்றாலும் கொப்பிழக்கப் பாயாதது
5 இனியொரு விதி செய்யப் புறப்பட்டவர்
7 சேற்றில் மலரும் செந்தாமரை அல்ல
9 திங்கள் (குழம்பியுள்ளது)
24 உறவுக்குப் பகை
28 சமரசம் உலாவும் இடம் (குழம்பியுள்ளது)
30 கறிக்குதவாத சுரக்காய் (குழம்பியுள்ளது)
32 பசி அறியாதது
36 முனிவர்களும் ஞனிகளும் தேடுவது
43 உயிரின் அடிப்படை அலகு
55 அதிகாரத்திலுள்ளவர்களிடமும் ஆயுதமேந்தியவர்களிடமும் அருகி வருவது
60 தமிழர்களின் ஒரு வஸ்திரம்
62 மரணவிட்டில் கேட்பது (குழம்பியுள்ளது)
68 வடக்கையும் கிழக்கையும் பிரிக்க முயல்வது மரத்தைப் பிளக்கும் இது போன்றதே.
69 இலங்கையின் அமைதியற்ற ஒரு பகுதி (முற்றுப்பெறவில்லை)
74 ஹெபறோனிலும் காத்தான் குடியிலும் இங்கு வைத்து மக்கள் கொல்லப்பட்டனர்.
76 இசைக்கு இது இன்றியமையாதது
87 இலங்கைத் தமிழர்கள் அடிக்கடி உட்படுத்தப் படுவது.

### குறுக்கெழுத்துப் போட்டி 2

சரியான விடை எழுதி பரிசு பெறுவோர்:

க. சத்தியசீலன்
வவுனியா

---

வாசுகி சபாரத்தினம்
மண்டூர்

### வாசகர் கவனத்திற்கு

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் திட்ட அறிக்கை வெகுவிரைவில் புத்தக வடிவில் வெளிவர இருப்பதால் இப்பக்கத்தில் வெளிவரும் **“எமது கட்சியும் மக்களும்”** தொடர் நிறுத்தப்பட்டுள்ளது. புத்தக வடிவிலான அரசியல் திட்ட அறிக்கை உங்களுக்கு கிடைப்பதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள் ளப்படும்.

**ஆசிரியர் பீடம்,**

### குறுக்கெழுத்துப் போட்டி-2 விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | ரே | 2 ம | தா | 3 சா | ■ | 4 நா | ற் | ப | 5 து |
| ர | ■ | ந் | ■ | 6 க | 7 ட் | சி | ■ | ■ | ண் |
| 8 பா | ர | தி | 9 தா | ச | ன் | ■ | 10 க | ண் | டு |
| க | ■ | 11 ர | தி | ம் | சு | த் | ந் | ■ | ப் |
| 12 ர | 13 த | ம் | ■ | ■ | ம | ■ | 14 த் | 15 ம் | பி |
| 16 ன் | மி | ■ | 17 வி | ன் | ல | ணை | பு | சா | ர |
| ■ | ழ | 18 கி | க | ■ | ண | ■ | ரா | ■ | சு |
| 19 க | ர் | நா | ட | க | ■ | 20 ம | ண | 21 ம் | ர |
| 22 ம் | க | க் | க | ■ | 23 ஆ | ர | ம் | ப | ம் |
| 24 பு | ள் | ளி | வி | ப | ர | ம் | ■ | சா | ■ |

### தண்(?)பா

பெருமரத்தில் படருகின்ற கொடியென்றார் பெருமகனார்
சிறுபான்மை மினங்கலையேன் சீண்டுகிறார் - சிறு அளவும்
சீர்மையின்றிச் செப்புகின்ற வார்த்தைகளால் இவர்புத்திக்
கூர்மை யிலேதான் கோளாறு. - தழலேந்தி -

# சுவிஸிலிருந்து தமிழர்கள் திருப்பி அனுப்பப் படுவரா ?

சுவிஸ் அகதிகள் கவுன்சிலைச் சேர்ந்த மார்க்கஸ் லூஸ்லி (Markus loosl1) சுவிஸ் செஞ்சிலுவைச் சங் கத்தைச் சேர்ந்த கான்ஸ் பீட் மொசர் (Hans Beat Moser) சரிட் டாஸ் (Caritas) என்னும் அமைப் பைச் சேர்ந்த கேட் வான் டொக் (Geert Van Dok ) இவர்களுடைய ஆலோசகரான ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளரும், மனித உரிமைவாதியுமான வோல்ட் டர் கெல்லரும்(Walter Keller) அடங் கிய தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு வருகை தந்தது.

சுவிஸில் அகதி அந்தஸ்து மறுக்கப் பட்டு நாடு கடத்தப்படும் நிலையிலி ருக்கும் ஈழத் தமிழர்களின் பிரச் சினை சம்பந்தமாக ஆராய்ந்தறிவ தற்காகவே இவர்கள் இங்கு வந்தனர்.

சுவிற்சலாந்திலிருக்கும் ஈழத் தமிழர் களை நாடு கடத்துவது தொடர் பாக தை 12ம் திகதி சுவிஸ் இலங்கை அரசுகள் ஒரு உடன்படிக்கையை மேற்கொண்டன. இதனால் பாதிக்கப்படப் போகும் தமிழர்க ளின் தொகை 12,000 ற்கு மேலாகும்.

இந்த ஒப்பந்தத்திற்கு உடந்தையாக யு.என்.எச்.சி.ஆரும் செயற்படுவது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இவ் உடன்படிக்கை அமுலாவதைக் கண்காணிக்கும் பொறுப்பும் இவர்களிடமே விடப்பட் டுள்ளது.

அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட அகதித் தமிழர்களை கொழும்பிற்கு கொண்டுவந்து வீடுகளில் தற்காலிகமாக அதுவும் ஒரு மாதத் திற்கு தங்க வைக்கப்படுவார்களாம். (அதற்குமேல் அவர்கள் அங்கும் தங்கமுடியாது.) பின்னர் அவர்களு டைய சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இந்த சுவிஸ் பிரதிநிதிகள் குழுவினர் செயலாளர் நாயகம் தோழர் க.பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈபிஆர்எல்எப் பிரதிநிதிகளைச் சந்தித்து சுவிஸ் அரசு ஏன் இவ்வாறு செய்ய முற்படுகிறது என விளக்க முற்பட்டனர்.

**அவர்களின் விளக்கங்கள்:**

1. சுவிஸிலுள்ள வலதுசாரி அரசி யல் கட்சிகள் குடியேற்றவாசிகள் வெளியேற்றப்பட வேண்டும் என்று அரசுக்கு நெருக்குதல் கொடுக் கின்றனர்.

2.வேலை இன்மை, சுவிஸ் தொழி லாளர்கள் மத்தியில் நிலவும் விரக்தி போன்றவற்றை வலதுசாரிக் கட்சி கள் குடியேற்ற வாசிகளுக்கெதிராக திசை திருப்பியுள்ளன.

விசித்திரமான விடயம் என்னவென்றால் சுவிஸிலுள்ள ஹோட்டல் உரிமையாளர்கள் மட்டும் இலங்கைத் தமிழர்களை திருப்பி யனுப்பக் கூடாதென்கிறார்களாம்.

ஏனெனில் இலங்கைத் தமிழர்களைப் போல மலிவான தொழிலாளர்கள் இவர்களுக்கு கிடைப்பதரிது.

இவை தொடர்பாக செயலாளர் நாயகம் தோழர் க.பிரேமச்சந்திரன் அவர்கள் பதிலளித்தார்.

1.அகதிகள் பிரச்சினை மனிதாபி மானப் பிரச்சினையாக அல்லாமல் அது இங்கு அரசியல் பிரச்சினை ஆக்கப்பட்டுள்ளமை ஒரு வேதனைக் குரிய விடயமாகும் என்று குறிப்பிட் டார்.

2. இலங்கை அரசு நிதி வாங்கும் ஸ்தாபனங்களுக்கு (Aid Consortium) நிலமைகள் சுமூகமாக இருக்கின்றன என்று காட்டும் முயற்சியும் இதில் அடங்குகிறது.

3.சுவிஸில் வேலை இன்மையோ, தொழிலாளர்களின் விரக்தியோ, வலதுசாரி அரசியல் கட்சிகளின் திசைதிருப்பும் செயற்பாடுகளோ அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச் சினையாகும். ஆனால் இங்கு அகதித் தமிழர்களை பலவந்தப்படுத்தி நாடு கடத்துவதன் மூலம் அவர்கள் பிரச் சினைகளை ஏற்றுமதி செய்கி றார்கள்.

4.இந்தப் பிரச்சினைகளால் உண் மையில் அகதிகளான தமிழர்தான் பந்தாடப்படுகிறார்கள்.

இதுபற்றி தோழர் பிரேமச்சந்திரன் மேலும் விபரிக்கையில் கொழும் பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்படுவதையும், விசார ணைகள் எதுவுமின்றி நீண்டநாட் கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை யும் விலாவாரியாக எடுத் துரைத்தார்.

கொழும்புவாழ் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் தம்மைப்பற்றிய விபரங்களை பதிவு செய்ய பலவந் தப்படுத்தப்படுகிறார்கள். பொலி சார் பணம் பறிக்கும் வேலைகளும் நடைபெறுவதையும் இதில் கூடுதலாக வெளிநாடுகளிலிருந்து வந்த தமிழர்களே பலியாகிறார்கள் என்றும், சுவிஸிலிருந்து வரும் தமிழர்கள் இதே பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டி வரும் என்றும் குறிப்பிட்டார்.

அவர்களின் சொந்தப் பிரதேசங் களோ பொருளாதார முற்றுகைக் குட்பட்டவை. கடல் வலயத்தடை மற்றும் பொருளாதாரத் தடைகளி னால் பிரதான தொழில்களான மீன்பிடியும், விவசாயமும் முற்றுமுழு தாகவே ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இந்நிலையில் அவர்கள் தொழிலே தும் அற்றவர்களாக அலைய வேண் டும். அத்தோடு இராணுவத்தினதும், புலிகளினதும் கெடுபிடிகளுக்கும் உள்ளாக நேரிடும்.

இந்த நிலவரங்களை சுவிஸ் பிரதிநி திகள் குழுவினர் சுவிஸ் அரசுக்கு வலியுறுத்த வேண்டுமென ஈபிஆர்எல்எப் பிரதிநிதிகள் குழுவி னர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்..

அதுமாத்திரமல்லாமல் சுவிஸ் அர சாங்கத்தின் இந்த நடவடிக்கை வேறு மேற்கு நாடுகளில் வாழும் லட்சக்கணக்கான அகதித் தமிழர் கள்மீதும் இதேமாதிரியான நிர்ப்பந் தங்களை உருவாக்கும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மனித உரிமை விடயங்க ளில் கூடுதல் கரிசனை கொண்டதா கக் கருதப்படும் சுவிஸ் அரசாங்கம் இப்படியானதொரு நடவடிக் கையை மேற்கொள்வது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

சுவிஸ் அகதி வெளியேற்றப் பரிசோ தனையில் இலங்கைத் தமிழர்கள் தான் முதல் பலியாடுகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமது அரசியல் கருத்து வேறுபாடு களுக்கப்பால் அனைத்து தமிழர் நலன் விரும்பும் அமைப்புக்களும் இணைந்து செயற்படாவிட்டால் சர் வதேச அளவிலும், உள்நாட்டிலும் ஈழத்தமிழர்கள் பாரிய பிரச்சினைக ளுக்கு முகம் கொடுக்க வேண்டி யேற்படலாம்.

## ஜனாதிபதி விஜேதுங்கா உதிர்த்த
## ஒரு டசின் சிந்தனை முத்துக்கள்!

1. நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல. பயங்கரவாதப் பிரச்சினையே.
2. கிழக்கில் ஜனநாயகம் மலர்ந்துள்ளது. வடக்கில் அதுவும் யாழ்ப்பாணத்தில் பயங்கதூவரதப் பிரச்சினை நிலவுகிறது. அதனையும் இன்னும் சிறிது காலத்துள் ஒடுக்கி விடுவோம். அதன்பின் எல்லாம் சரியாகிவிடும்.
3. நாங்கள் உணவு அனுப்பாவிட்டால் தமிழர்கள் மண்ணைத்தான் தின்ன வேண்டிவரும்.
4. பெரும்பான்மையினர் மரம் என்றால் சிறுபான்மையினர் அதனைப் பற்றிப்படரும் கொடியாகும்.
5. ஒரு கோப்பை உணவுதான் கொடுக்கலாம். இரு கோப்பை கேட்டால் எப்படிக் கொடுப்பது?
6. முள்ளுக்கரண்டி, பீங்கான், சாப்பாடு எல்லாம் கொடுத்தாயிற்று. மற்றது அவர்களின் வேலை.
7. ஆபிரிக்காகாரன் எவ்வாறு ஆஸ்திரேலியாவில் பிரதமராக முடியும்? சீனாக்காரன் எப்படி இந்தியப் பிரதமராக முடியும்? இலங்கையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எப்படி ஜனாதிபதியாக முடியும்?
8. பெரும்பான்மை மக்களின் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை இன்மையாலேயே சிறுபான்மை இனங்களைச் சார்ந்து செயற்பட வேண்டி இருக்கிறது. ஆகவே பெரும்பான்மை இனக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.
9. மாகாணசபை என்பது அரசின் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான சபையே. அவை எதிர்க்கட்சிகளின் கைகளுக்குச் செல்வதால் ஒரு பிரயோசனமுமில்லை.
10. சிங்களவர்களுக்குள்ளது இது ஒரே நாடு. இதன் இறைமையைப் பாதுகாக்க வேண்டும். யாருக்கும் விட்டுக் கொடுத்துவிட முடியாது.
11. வெளிநாடுகளில் கடன்படுவது பற்றி எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுகின்றன. நாம் பெறுவது நீண்டகாலக் கடன். 50 வருடங்களின் பின் கடன் வாங்கியவனும் செத் துப்போவான். கடன் கொடுத்தவனும் செத்துப்போவான்.
12. மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை விட சிங்கள மக்களின் வாழ்க்கை தரந்தாழ்ந்தது. எமது நிலங்களை யாருக்கும் கொடுத்துவிட முடியாது.

( இன்னும் வரும் )



32, மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-7 க.பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.